திரு. செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளது என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அந்த சார்பு நிலை நீதிமன்றம் மேட்டூரில் எப்போது செயல்படத் தொடங்கும் என்பதையும் அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு அது விவரமாக வெளியிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 3, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

தமிழக குடிமக்களுக்கு புகைப்படத்துடன் ''குடியுரிமைச் சான்று'' அளிக்கும் திட்டம்.

*9544—திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வாழும் குடிமக்களுக்கு புகைப்படத்துடன் கூடிய ''குடியுரிமைச்சான்று'' (Citizenship card) அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

முற்பகல் 10–05

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலின்போது திருட்டு ஓட்டு போடுகிற தில்லு-முல்லு கும்பல்கள் இப்போது பெருகிவிட்டன. இப்போதெல்லாம் இறந்தவர்களுடைய ஓட்டுகள் எல்லாம் கூட ஓட்டுப் பெட்டிக்கு வந்து சேருகின்றன. இந்த அடையாள அட்டை

1993 பிப்ரவரி 8]

இல்லாத காரணத்தினாலே இந்த சமுதாயத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் வருகின்றன. நம்முடைய பணத்தை நாமே பேங்கில் போட்டால் கூட அதைத் திரும்ப எடுக்கிறபோது ஐடென்டிஃபிகேஷன் எஷ்டாப்பிளிஷ் செய்வதற்காக நாம் படாத பாடு பட வேண்டி இருக்கின்றது. டிராஃபிக் போலீசாரிடம் யாராவது மாட்டிக் கொண்டால் தவறான அட்ரஸை எல்லாம் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுகின்றார்கள். பிறகு அவர்களுக்கு சம்மன் எத்தனை அனுப்பினாலும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போலீஸ் திணறுகிறது. இதையெல்லாம் தவிர்க்கும் முகத்தான் இந்த அரசு அடையாள அட்டை அதாவது சிட்டிஷன்சிப் கார்டு வழங்குவதற்கு ஆவன செய்யுமா, இதை மறுபரிசீலனை செய்யுமா என்று நான் பணிவன்போடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்ட நிர்வாகம் என்ற பொருள் மைய அரசுக்கு ஒதுக்கப்பட்டது. மைய அரசினுடைய அனுமதி இல்லாமல் குடியுரிமை கார்டு கொடுக்க மாநில அரசுக்கு உரிமை இல்லை.

<u>திரு. சி. ஞானசேகரன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மைய அரசுக்கு உட்பட்டதாக இருந்தாலும் நீங்கள் குடியுரிமைச் சான்று என்ற ஒன்றை வழங்கத் தேவையில்லை. ஆனால், நீங்கள் அடையாள அட்டையாவது வழங்கலாம். பொதுவாக குடியுரிமைச் சான்று—சிட்டிஷன் சிப்கார்டு அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருக்கிறது. தமிழகத்திலே ஓட்டு போடப் போகிறபோது திருட்டு ஓட்டைத் தடுக்கிற வகையிலேயாவது அடையாள அட்டையை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று, நான் அமைச்சரிடம் இருந்து அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் என்பது வேறு; குடியுரிமைச் சான்று கேட்பது என்பது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்று. அரசியல் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களே ஒரு வழக்கறிஞர். அரசியல் உரிமைச் சட்டப்படி இந்தியாவில் பிறந்த யாரும் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். குடி இருக்கலாம், நிலம் வாங்கலாம், நிலம் விற்கலாம், வியாபாரம் செய்யலாம்—இப்படி எல்லாம் செய்கிற உரிமை இருக்கிறபோது, குடியுரிமைச் சான்று ஒரு மாநிலத்திலே நாம் கொடுத்தால், மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் இங்கே வரக் கூடாது என்றோ, அவர்கள் இங்கே குடி இருக்கக் கூடாது என்றோ, வியாபாரம் செய்யக் கூடாது என்றோ சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்கள் இன்றைக்கு 'சிட்டிஷன்சிப் கார்டை' பற்றி ஒரு வினாவை எழுப்பி இருக்கின்றார்கள். அரசியல் சாசன பிரிவு 2-ஐ பார்த்தால், ஒரே ஒரு சிட்டிஷன்சிப் தான் நமக்கு உண்டு. அது இந்தியன் சிட்டிஷன்சிப். வேறு எந்த சிட்டிஷன்சிப்பும் நமக்கு வழங்க முடியாது. ஆனால், அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிட்டிஷன்சிப் கார்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன், உறுப்பினர் கேள்வி கேட்டு இருக்கிறார். அது இப்போது மைய அரசாங்கத்தின் கீழ் இருக்கிறது என்று அதற்கு அமைச்சர் சொல்லி இருக்கிறார். நீங்கள் சொல்வது ** என்கிறமாதிரி அமைந்துவிடும். அந்த மாதிரிச் சொல்ல வேண்டாம். நீங்கள் கேள்வியாகக் கேட்கலாம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வியைப் பற்றித்தான் நான் இப்போது சொல்லிக்கொண்டு இருக்கின்றேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது ஒரு உறுப்பினர் எழுப்பிய ஒரு கேள்வி விவாதப் பொருளாக ஆகக் கூடாது என்று சட்டமன்றப் பேரவை விதி இருக்கிறது. அதனால், உறுப்பினர் கேட்ட துணைக் கேள்வி பற்றி நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் வேண்டாம். நீங்கள் கேள்வியாகக் கேட்டு அமைச்சரிடம் பதில் வாங்கலாம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : Point of order can be raised at any time please see rule.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. Point of order cannot be raised during question hour, அதனால், நீங்கள் துணைக் கேள்வி கேட்டு அமைச்சரிடம் பதில் வாங்கலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கலாம். அதற்குரிய அமைச்சர்கள் பதில்தான் தருவார்கள். உறுப்பினர்களுக்கு உறுப்பினர்களே பதில் சொல்வது என்பது சரி வராது.

திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் இங்கே கேள்வி எழுப்ப அனுமதிக்கப்பட்டு, எழுப்பிய பிரச்சினையின் மீது ** என்று கேட்பது சரியல்ல. அது முரணாக இருக்கிறது. அது அவைக் குறிப்பில் வேண்டாம்; அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

கோவில்பட்டியில் பெண்களுக்கென தனிக்கல்லூரி அமைத்தல்

*10317—திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியில் பெண்களுக்கு தனிக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சுருக்கமாகக் கூறி விட்டார்கள். சிதம்பரனார் மாவட்டத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.